# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.No.28/2021 | **PW - 1** | | Cross |
| **Name** | சக்கரவர்த்தி | **Father Name** | **:** | புருசோத்தமன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 15.10.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 11.16 AM

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நானும் சேகர் பாஸ்கர் சம்பத் ஆகியோரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சேகர் எங்கள் அனைவரின் சார்பாகவும் முதல் விசாரனண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவாவில் நாங்கள் தாக்கல்செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சர்வே எண்.1/6K என்ற நிலம் தான் முக்கோண வடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் குறிப்பிட்டுள்ள 16 அடி பாதையின் விஸ்தீரணம் என்னவென்றால் விஸ்தீரணம் எனக்கு சரியாக தெரியாது. அந்தப் பாதையின் நீளம் எவ்வளவு என்றால் சுமார் 25 அடி முதல் 30 அடி வரை வரும். நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவாவில் அந்த 16 அடி பாதையின் நீளம் எவ்வளவு என்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்றும் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 19 / 31 சி யாருக்கு சொந்தமானது என்றால் மாலிக் பாஷா என்பவருக்கு சொந்தமானது. அவர் அங்குள்ள வீட்டு உரிமையாளர் அனைவருக்கும் எழுதிக் கொடுத்துள்ளார். அவர் அந்த சர்வே எண்ணில் வாதிகளாகிய எங்களுக்கும் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக் கொடுத்துள்ளார். அதில் எவ்வளவு நீளம் எவ்வளவு அகலம் எவ்வளவு பரப்பு அந்த வழி எங்கு ஆரம்பிக்கிறது என்று எழுதிக் கொடுத்து உள்ளாரா என்றால் எழுதிக் கொடுத்துள்ளார். நான் என் தாவாவிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ வழியின் நீளம், அகலம் விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். எவ்வளவு நீளம் அகலம் என்றால் 120 அடி நீளம் 16 அடி அகலம் ஆகும். தாவா சொத்து விவரத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் 19 / 31பி யாருக்கு சொந்தமானது என்றால் சரியாக தெரியவில்லை மாலிக் பாஷாவுக்கு

சொந்தமானதாக இருக்கும். நான் சொல்வது தவறு அது பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 1/6 K க்கு மேற்கு யாருக்கு சொந்தமானது என்றால் ரெட்டிபட்டி பஞ்சாயத்துக்கு சொந்தமானது. நான் சொல்வது தவறு மேற்குபுறம் உள்ள நிலம் இந்த பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. தாவா மாதிரி வரைபடத்தில் நாங்கள் முக்கோண வடிவில் காட்டியுள்ள சர்வே எண் 1/6 K நிலத்தில் பாதையாக காட்டப்பட்ட இடம் போக மேற்குபுறம் உள்ள முக்கோண வடிவிலான இடத்தை இந்த பிரதிவாதிகள் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த முக்கோண வடிவிலான இடத்தில் ஒரு போர்வெல் உள்ளதா என்றால் போர்வெல் அமைத்து கொண்டிருந்தனர் நாங்கள் அதை தடுத்து நிறுத்தி விட்டோம். சர்வே எண் 19/31 பி -யில் நாங்கள் எந்த உரிமையும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 19/31 பி யில் பாதை எதுவும் இல்லை அதனால் தான் நாங்கள் இந்த தாவாவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் எங்கள் தாவாவின் சொத்து விவரத்திலோ மாதிரி வரைபடத்திலோ 16 அடி பாதையின் விஸ்தீரனத்தையும் மீதமுள்ள முக்கோண வடிவிலான இடத்தின் விஸ்தீரனத்தையும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 1/6F என்ற நிலம் என்னவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண் 1/6 மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 1/6 மொத்த விஸ்தீரணம் மற்றும் அது எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை எனது தாவாவில் சொல்லி உள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் சர்வே எண் 1/6K 16 அடி பாதையாக காட்டப்பட்டுள்ள பாதையை ஒன்றாம் பிரதிவாதியும் அவரது வீட்டிற்கு செல்வதற்காக பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 19 / 31B இன் புதிய உட்பிரிவு சர்வே எண் 19/2 சி2 என்றாலும் அது பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீட்டுமனை என்று சொன்னாலும் அது எனக்கு தெரியவில்லை. சர்வே எண் 1/6K இல் பாதையாக ஒதுக்கப்பட்ட 16 அடி இடம் போக மீதமுள்ள முக்கோண வடிவிலான 387 சதுர அடி நிலத்தை பிரதிவாதிகள் 1978 ஆம் ஆண்டில் சர்வே எண் 19 / 31 பி- ஐ விலைக்கு வாங்கிய காலத்தில் இருந்து இதையும் சேர்த்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் அனுபவம் செய்து வருவதன் காரணமாக தான் அதில் தாவா தாக்கல் செய்வதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே போர்வெல் அமைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 1/6K அரசு நிலம் என்று நாங்கள் கூறுவதால் வருவாய்த்துறை அதிகாரிகளை இந்த வழக்கில்

தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் சேர்க்கவில்லை. சர்வே எண் 1/6K- இல் 387 சதுர அடி நிலத்தை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதற்கு இதுநாள்வரை வருவாய் துறையினர் எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அது அரசு நிலம் என்பதால் பிரதிவாதிகளின் அனுபவத்தை ஆட்சேபனை செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரெட்டிபட்டி பஞ்சாயத்து பிரதிவாதிகளின் அனுபவத்திலிருந்து அந்த சொத்தை எடுத்ததற்காக ஏதாவது ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சர்வே எண். 1/6K- இல் பாதையின் அளவு எவ்வளவு என்றும் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ள நிலத்தின் அளவு எவ்வளவு என்றும் சொத்து விவரத்தில் குறிப்பிடாத காரணத்தால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.  சர்வே எண். 19/31 சி மாலிக் பாஷாவுக்கு சொந்தமானது என்று கூறியுள்ள நிலையில் அவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் அவர் இறந்துவிட்டார் அந்தப் பாதையை அவர் எழுதிக் கொடுத்து விட்டார் அதனால் சேர்க்கவில்லை.  உரிய தரப்பினர்கள் சேர்க்காத காரணத்தால் இந்த தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.  நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்யும் போது நான் உடன் இருந்தேன் அவர் அறிக்கையில் என்ன குறிப்பிட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நாங்கள் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவுகளும் நாங்கள் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளும் வேறுபட்டுள்ளது அதனால் சரியான அளவுகளை குறிப்பிடாத காரணத்தால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**முடிவு நேரம் – 11.55 AM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.